Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

பாடம்:- வணிகக்கல்வி

வாரம் 07

தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

தரம்:13

**தேர்ச்சி 16:-** வணிகத்தின் வெற்றிக்கு மனிதவளத்தை விளைதிறன் , வினைத்திறனாக பயன்படுத்துகின்ற முறையினை தேடி அறிவார்.

**தேர்ச்சி மட்டம் 16.11**:- கைத்தொழில் உறவுகளை விசாரித்தல்.

(01). தொழில் வழங்குனர் ஊழியர் எனும் இரு பிரிவினர்களுக்கு இடையே காணப்படும் ஏதேனும் சிறந்த அல்லது மோசமான ஒரு முறை யிலான தொழில்சார் உறவானது "கைத்தொழில் உறவு" எனப்படும்.

I. தொழில் வழங்குனர் ஊழியர் என்னும் பதங்களை விளக்குக.
II. சிறந்த தொழில் வழங்குநர் ஊழியர் உறவினால் நிறுவனம் ஒன்றிற்கு கிடைக்கப் பெறுகின்ற பயன்கள் 05 தருக.
III. மோசமான தொழில் உறவின் மூலமாக நிறுவனமொன்றுக்கு கிடைக்கும் பிரதிகூலங்கள் யாவை?

(02). தொழில்சார் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காகவும் அவற்றை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஏதாவது கைத்தொழில் ஒன்றில் அல்லது தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் வழங்குனர் அல்லது ஊழியர் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளும் அமைப்பு தொழிற்சங்கம் எனப்படும்.

I. தொழிற்சங்கம் ஒன்றின் நோக்கங்கள் 4 தருக
II. தொழிற்சங்கம் ஒன்றின் கருமங்கள் 4 தருக
III. கூட்டு பேரம் பேசுதல் கூட்டு பேச்சுவார்த்தை என்பதால் கருதப்படுவது
IV. வேலை நிறுத்தத்தின் காரணமாக தொழில் வழங்குனர் கிடைக்கும் பாதகமான விளைவுகள் யாவை?